**உஹன பிரதேச சபை - 2023**

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

உஹன பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுமற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து உஹன பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த அறிக்கையின் நிதிக்கூற்று கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை சம்பந்தமான பொறுப்பு நிருவகிக்கும் தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- வெளிப்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 34 சூரிய சக்தி மின் விளக்குகளின் பெறுமதி இரண்டு தடவைகள் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 1,587,100 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | அடுத்துவரும் ஆண்டிற்கான கணக்குகளைத் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 சனவரி மாத்திலிருந்து 2022 திசெம்பர் மாதம் வரையான காலம் தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 562,275 நீதிமன்ற தண்டப் பண வருமானமாக கணக்கு வைக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான வருமானம் அத்தொகையால் அதிகரத்து காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய சம்பளத்தின் பெறுமதி ரூபா 2,566,320 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | பிரதேச அபிவிருத்தி உதவி செயற்திட்டத்தின் (PT1-2$^{nd}$ 50%) கீழ் நிர்மாணிக்கப்பட்ட | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | வாகனங்களை சேவை செய்யும் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,398,106 பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | 26/106 ஆம் இலக்க வீட்டிற்கு அருகாமையிலிருந்து 26/116 ஆம் இலக்க வீடு வரையான வீதிக்கு கொங்கிரீட் இடும் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய பெறுமதியானது நிர்மாண வேலை கடன்பட்டோர் மற்றும் நிர்மாண வேலை கடன்கொடுத்தோரரின் கீழ் ரூபா 500,000 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அடுத்துவரும் ஆண்டிற்கான கணக்குகளைத் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஊ) | கிராமிய வீதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக ரூபா 1,001,348 நிர்மாண வேலை கடன்பட்டோராக மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

**1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாண வேலை கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் பட்டோலைகளின் படியான மீதிக்கும் நிதிக்கூற்றுக்களின் படியான மீதிக்குமிடையே ரூபா 1,473,330 வித்தியாசம் காணப்பட்டது. | பதிவேடுகளை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இணக்கமின்மையினை அடையாளங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| | விடயம் | தொகை<br>ரூபா | வழங்கப்படாத கணக்காய்வு சான்று | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | முற்கொடுப்பனவுகள் (முற்பணம்) | 1,017,183 | (i) மீதிகளின் உறுதிப்படுத்தல்<br>(ii) பதிவேடுகள் மற்றும் பட்டோலைகள் | இப்பெறுமதியை உறுதிப்படுத்துவதற்கான தகவல்களை தேடிப்பார்ப்பதற்கு முடியாதுள்ளது. | மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு தேவையான மேலதிக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஊழியர் பிணை | 7,590 | (i) ஊழியர் பிணைப் பதிவேடு<br>(ii) பட்டோலை | -மேற்படி- | -மேற்படி- |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்னைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலிவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) 1988 பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாக) வீதி | | | |
| (i) 5(12) ஆம் விதி | நிதி மற்றும் களஞ்சிய நடவடிக்கைகள் தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து போதியளவு பிணையை பெற்றுக்கொள்வதற்கு நடவக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | உத்தியோகத்தர்களிடமிருந்து உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் பிணைப் பணத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி மற்றும் நிருவாக விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) 33, 34 மற்றும் 35 ஆம் விதிகள் | வீதவரிப் பணத்தை செலுத்த தவறிய நபர்கள் தொடர்பான பட்டியலை தயாரித்து ஆதனங்களை தடைசெய்வது தொடர்பாக சபையினால் போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்காததுடன் நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்காக துரித நடவடிக்கை எடுக்கப்படவில்லையாயின் நிலுவை மீதி இன்னும் அதிகரித்துச் செல்லக்கூடியதாகக் காணப்பட்டது. | காலாண்டு ரீதியான அறிவித்தல் வழங்கப்பட்டு நிலுவையை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் ஆதனங்களை தடை செய்வதற்கான வேலைத் திட்டங்கள் இடம்பெற்று வருகின்றது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 218 ஆம் விதி | சபையின் அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக ஒவ்வொரு ஆண்டிற்கு ஒரு தடவையேனும் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | காணி மற்றும் கட்டிடங்களை வருடாந்தம் அடையாளங்கண்டு பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 1,559,586 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவுகள் ரூபா 1,834,389 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீத வரியும் வரியும் | 3,244,785 | 2,108,779 | 1,901,676 | 4,492,369 | 2,544,784 | 2,420,432 | 2,224,608 | 4,285,266 |
| ii. | வாடகை | 13,476,200 | 5,225,212 | 5,056,778 | 332,308 | 12,974,968 | 4,506,650 | 4,615,140 | 163,874 |
| iii. | அனுமதிப்பத்திர கட்டணம் | 1,451,000 | 519,500 | 519,500 | - | 1,601,000 | 492,250 | 492,250 | - |
| iv. | ஏனைய வருமானம் | 2,507,000 | 3,586,267 | 3,586,267 | - | 950,000 | 819,770 | 819,770 | - |
| மொத்தம் | | 20,678,985 | 11,439,758 | 11,064,221 | 4,824,677 | 18,070,752 | 8,239,102 | 8,151,768 | 4,449,140 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவையான வீதவரியின் பெறுமதி ரூபா 4,492,369 ஆக இருந்ததுடன் அது ஆண்டிற்கான மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 1,047,926 உடன் ஒப்பிடுகையில் நான்கு மடங்கு அதிக பெறுமதியாகும். | காலாண்டு ரீதியான அறிவித்தல் வழங்கப்பட்டு நிலுவைகளை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வருமானத்தை துரிதமாக அறவீடு செய்தல் ணேடும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 அதிகாரச் சட்டத்தினால் ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் உப நியதிச்சட்டம் விதிக்கப்பட வேண்டிய விடயங்களை அடையாளங்கண்டு உப நியதிச்சட்டம் விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 05 உப நியதிச்சட்டங்கள் மாத்திரம் விதிக்கப்பட்டிருந்தன. | விதிக்க வேண்டிய உப நியதிச்சட்டத்தினை அடையாளங்கண்டு அவற்றினைத் தயாரித்து எதிர்காலத்தில் அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உப நியதிச்சட்டங்களை விதிக்கும் நடவடிக்கையை சட்டமாக்குதல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | பிரதேச சபையிடம் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ பிரிவு காணப்படாததுடன் மீளாய்வாண்டில் ரூபா 968,397 செலவு செய்து சேரித்த கழிவுப் பொருள் 1,200 தொன்கள் அளவானவை அம்பாறை நகர சபையின் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. இதற்கிணங்க பிரதேச சபைக்காக தனியாக கழிவுப் பொருள் முகாமைத:துவ நிலையத்தை தோற்றுவிப்பது தொடர்பாக சபை கவனம் செலுத்த வேண்டியிருந்தது. | பிரதேச செயலகத்தின் மூலம் ஒரு காணியை ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தினை தோற்றுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தினை தோற்றுவிப்பது தொடர்பாக சபை கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (ஆ) | மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் நிதி ஏற்பாட்டின் கீழ் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தை நிர்மாணிப்பதற்காக 2016 ஆம் ஆண்டில் கிடைத்த ரூபா 1,789,907 தொகையில் சபையினால் உடன்படிக்கையாளருக்கு ரூபா 1,314,000 முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. பொதுமக்களின் எதிர்ப்பின் காரணமாக இந்த நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பித்தல் கைவிடப்பட்டிருந்த போதிலும் அந்த முற்பணத்தை 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக உடன்படிக்கை செய்தவரிடமிருந்து மீளப் பெற்றுக்கொள்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இச்செயற்திட்டம் சம்பந்தமாக நியாயப்படுத்தி ஒப்பந்தக்காரர் வேலை சம்பந்தமாக அடிப்படையாக மேற்கொண்ட செலவுகளைத் தவிர்த்து மிகுதி முற்பணத்தை சபைக்கு வழங்குமாறு தெரியப்படுத்தப்பட்டது. | உரிய செயற்திட்டத்தினைப் பூரணப்படுத்துவதற்கு அல்லது பணத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பிரதேச சபையின் அதிகார பிரதேசத்திலுள்ள ஆதனங்களின் மீது காலரீதியாக மதிப்பீடு செய்து குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 2007 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் அடிப்படையில் வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டிற்காக 2023 ஒக்தோபர் மாதம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2024 ஆம் ஆண்டில் அறவீடு செய்யப்பட்டது புதிய மதிப்பீட்டின் பிரகாரமாகும். | வீத வரியை உரிய காலத்தில் மதிப்பீடு செய்து வரிப் பணத்தை அறவீடு செய்டவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சபையின் 44 மயானங்கள் மற்றும் 05 விளையாட்டு மைதானங்களின் பெறுமதியை அடையாளங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | இக்காணிகளை தற்பொழுது சபையின் பெயருக்கு பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் அவை பெறுப்பேற்கப்பட்டதன் பின்னர் மதிப்பீடு செய்து கணக்கிற்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுமதியை அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | சபையிடம் காணப்பட்ட 10 வாகனங்களை திருத்தம் செய்து மீண்டும் பயன்படுத்துவதற்கு அல்லது திருத்தம் செய்யமுடியாத வாகனங்களை பொருத்தமான வகையில் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வாகனங்களை ஏலத்தில் விற்பதற்கு பிரதிப் பிரதம செயலாளருக்கு (நிதி) தெரியப்படுத்தப்பட்டது. | பொருத்தமான வகையில் கைதவிர்ப்புச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கையை துரிதமாக எடுத்தல் வேண்டும். |
| (இ) | சபையின் பொறுப்பில் காணப்பட்ட 14 வாகனங்களின் உரிமையை சபையின் பெயருக்கு பொறுப்பேற்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 02 வாகனங்களின் உரிமையை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் மிகுதி வாகனங்களுக்காக MTA 06 படிவத்தினை பூரணப்படுதவற்கு முடியாதுள்ளதனால் பொறுப்பேற்கும் நடவடிக்கை நிறுத்திவைக்கப்பட்டுள்ளது | சபையின் பொறுப்பில் காணப்படுகின்ற வாகனங்களின் உரிமையை சபையின் பெயருக்கு பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 மனிதவளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியளவில் சபையின் 19 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. | சபையில் காணப்படுகின்ற வெற்றிடங்கள் சம்பந்தமாக உரிய நிறுவனங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது அமைப அடிப்படையில் 05 ஊழியர்கள் வேலைக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | ஆளணியினரின் வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 40 ஆம் பிரிவு மற்றும் நிதிப்பிரமாணம் 133(1) இன் பிரகாரம் உள்ளக கணக்காய்வின் மூலம் சபையின் அனைத்து செயற்பாடுகளையும் உள்ளடக்கும் வகையில் நிறுவன செயற்பாட்டு நடைமுறைகளை மேம்படுத்துதல் மற்றும் செயலாற்றலினை அதிகரிப்பதற்காக போதிய சிபாரிசுகள் தயாரித்து அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் போதியளவு சிபாரிசினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.2 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் 2019 சனவரி 12 ஆந் திகதிய DMA/01-2019 ஆம் இலக்க உள்ளக கணக்காய்வு வழிகாட்டி தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டில் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஸ்தாபிக்கப்பட்டு குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கான நடைமுறையினை ஆரம்பித்தல் மற்றும் கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.3 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களையும் நோக்கங்களையும் அடைந்துகொள்வதற்காக தேவையான நிதி ஏற்பாட்டினை வழங்குவதற்கு சபையினால் போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களையும் நோக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டு நான்கு ஆண்டு அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்படுவதுடன் அதற்கிணங்க அடையாளங் காணப்பட்ட செயற்திட்டங்கள் சபை நிதியத்தின் மூலமும் ஏனைய அபிவிருத்தி செயற்திட்டங்களின் மூலமும் நடைமுறைப்படுத்தப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களையும் குறிக்கோள்களை யும் அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |